DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.III, SALEM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No.**CC.No. 951 of 2022**

Prosecution : P.W. 1

Deposition of Witness for Defence :

Court : Judicial Magistrate No.3, Salem.

| | |
|---|---|
| Name | செல்வராஜ் |
| Father's name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th August 2023.

2023ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 21ம் நாள் திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா.** வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.E.சந்தோஷ்குமார், பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

துவங்கும் நேரம்: பிற்பகல் 03.30

**எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக கு.வி.மு.சபிரிவு 317ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் சிற்புப காவல் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் செவ்வாய்பேட்டை காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வளாராக பணியில்இருந்தபோது

24.08.2022ம் தேதி காலை 8.30 மணிக்கு காவல் ஆய்வாளர் சண்முகசுந்தரம் அவரது தலைமையில் நானும், கிரேடு –1 338 பாலசுப்ரமணியம், கிரேடு–1 1010 மகேந்திரபூபதி ஆகியோரும் சேர்ந்து ரோந்து அலுவல் நிமித்தம் செவ்வாயபேட்டை ஸ்ரீமாண் தியேட்டர் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் அருகே சென்றபோது அங்கு ஒரு நபர் சந்தேகத்திற்கிடமாக நின்றுகொண்டு போலிசாராகிய எங்களை கண்டதும் தப்பியோட எத்தனித்தவரை போலிஸ் பார்ட்டி சகிதம்பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் மணிமாறன் என்றும் அவரது விலாசத்தை கூறினார். அவரை மேலும் விசாரிக்க அவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளான காருண்யா என்ற பெயர் கொண்ட லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளை துண்டு சீட்டுகளில் எழுதி பொதுமக்களுக்கு அவைகளை நிறைய பரிசு விழும் என ஆசை வார்த்தை கூறி விற்பனைக்கு வைத்திருந்ததையும் அவ்வப்போது சிறுசிறு வியாபாரிகளான குகை மாரியம்மன்கோவில் தெருவை சேர்ந்த முருகதாஸ் என்பவரிடம் மற்றும் மணியனூரை சேர்ந்த கண்ணன் என்பவரிடமும் லாட்டரி சீட்டுகளை விற்பனைக்காக கொடுத்து வந்ததையும் கூறினார். அதனால் அவர் செய்த குற்றத்தின் தன்மையை அவருக்கு எடுத்துக்கூறி அவரை காலை 9 மணிக்கு அவரை கைது செய்தார். பின்னர் அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அந்த நேரத்தில் அந்த இடத்தில் பொதுநபர்கள் யாரும் இல்லாத காரணத்தினால் அவருடன் சென்ற போலிஸ் சாட்சிகளான என் முன்னிலையிலும் கிரேடு–1 338 பாலசுப்ரமணியம் முன்னிலையிலும் ஆய்வாளர் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 9.15 மணி முதல் 10 மணி வரை பதிவு செய்தார்கள். மேலும் எங்கள் முன்னிலையிலேயே எதிரி மணிமாறன் எடுத்து ஒப்படைத்த 8 வெள்ளை துண்டு சீட்டுகளில் லாட்டரி எண்கள் எழுதிய சீட்டுகள் மற்றும் பணம் ரூ. 350யும் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். மேலும் எதிரி மணிமாறன்கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கடந்த 22.08.2022ம் தேதி குகை மாரியம்மன் கோவில்தெருவை சார்ந்த முருகதாஸ் என்பவரிடம் விற்பனை செய்த 10 லாட்டரிசீட்டுகளின் பணம் ரூ. 350ம் மற்றும் மணியனூரை சேர்ந்த கண்ணன் என்பவரிடம் விற்பனை செய்த 15 லாட்டரிசீட்டுகளின் பணம் ரூ. 525 ஆகியவற்றையும் செலவு செய்தது போக மீதமிருந்த ரூ. 500யை காலை சுமார்11 மணிக்கு நிலைய குற்ற எண் 221/2021ல் வழக்கிற்காக கைப்பற்றுதல் மகசர் மூலம் எங்கள் முன்னிலையில்

கைப்பற்றினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிகளிலும் நானும் மற்றும் பாலசுப்ரமணியம் அவர்களும் சாட்சியாக கையொப்பம் செய்தோம. பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரிமீது நிலைய குற்ற எண். 223/2022 வழக்கு பதிவு செய்து எதிரியை திரேக பரிசோதனை செய்து தகுந்த பாரா மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.1** ஆகவும், தொகை ரூ. 350 ஐ காண்பிக்கும் **புகைப்படம் அ.சா.ஆ. 2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. லாட்டரி சீட்டுகளின் எண்கள் எழுதிய வெள்ளை துண்டுச்சீட்டுகள் 8 எண்ணிக்கை **சா.பொ.1 ஆகவும்,** குறியீடுசெய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அன்றையதேதியில் எதிரி மீது பொதுமக்களில் யாரும ஏமாற்றப்பட்டதாக புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற பகுதி போக்குவரத்து நெரிசல் உள்ள பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரி எந்ததிசையில் எந்த இடத்தில் குறிப்பாக நின்று கொண்டிருந்தார் என்று கூற இயலாது என்றால் சரிதான். அன்றையதேதியில் நான் இருந்தபோது பார்வை மகசர் அல்லது மாதிரிவரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. பொதுமக்கள் முன்னிலையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். லாட்டரி சீட்டுகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுகிற நிலையில் அது எந்த மாநிலத்தை சேர்ந்தது என்றோ எந்த தேதியிடப்பட்டது என்றோ என்னால் குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் ஞாபகத்தில் இல்லை. முருகதாஸ் மற்றும் கண்ணன் ஆகியோர்கள் எங்கு குடியிருக்கிறார்கள் என்று தெரியாது. எதிரியை எப்போது கைது செய்தார்கள் என்றால் காலை 9 மணியளவில். என் முன்னிலையில் தான் சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். கைது விவரத்தை எதிரியின் குடும்பத்தாருக்கு யாருக்கு தெரிவிக்கப்பட்டது என எனக்கு தெரியாது விசாரணை அதிகாரிக்குத்தான் தெரியும். நான் கூறுவதுபோல சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அங்கு எதிரி நிற்கவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் அதன்பேரில் தடயங்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல.  விசாரணைக்காக வீட்டிலிருந்து எதிரியை அழைத்து வந்து அவர் தனது செலவிற்காக வைத்திருந்த பணத்தை வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

முடியும் நேரம்: பிற்பகல் 3.44

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th August 2023.

Signature of witness.

Taken down by me in the open Court. Read by the witness/accused to be correct.

Sd/-G.Thanga Karthika
Judicial Magistrate No.3, Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.III, SALEM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No.**CC.No. 951 of 2022**

Prosecution : P.W. 2

Deposition of Witness for Defence :

Court : Judicial Magistrate No.3, Salem.

| | |
|---|---|
| Name | பாலசுப்ரமணியம் |
| Father's name | மாரிமுத்து |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th August 2023.

2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 21 ம் நாள் திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா.** 2 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.E.சந்தோஷ்குமார், பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

துவங்கும் நேரம்: பிற்பகல் 03.45

**எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக கு.வி.மு.சபிரிவு 317 ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது சேலம் மாநகர நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ம் வருடம் செவ்வாய்பேட்டை காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது 24.08.2022 ம் தேதி காலை 8.30

மணிக்கு காவல் ஆய்வாளர் சண்முகசுந்தரம் அவரது தலைமையில் நானும், அ.சா.1 செல்வராஜ், கிரேடு–1 1010 மகேந்திரபூபதி ஆகியோரும் சேர்ந்து ரோந்து அலுவல் நிமித்தம் செவ்வாயபேட்டை ஸ்ரீமான் தியேட்டர் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் அருகே சென்றபோது அங்கு ஒரு நபர் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டு போலிசாராகிய எங்களை கண்டதும் தப்பியோட எத்தனித்தவரை போலிஸ் பார்ட்டி சகிதம்பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் மணிமாறன் என்றும் அவரது விலாசத்தை கூறினார். அவரை மேலும் விசாரிக்க அவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளான காருண்யா என்ற பெயர் கொண்ட லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளை துண்டு சீட்டுகளில் எழுதி பொதுமக்களுக்கு அவைகளை நிறைய பரிசு விழும் என ஆசை வார்த்தை கூறி விற்பனைக்கு வைத்திருந்ததையும் அவ்வப்போது சிறுசிறு வியாபாரிகளான குகை மாரியம்மன்கோவில் தெருவை சேர்ந்த முருகதாஸ் என்பவரிடம் மற்றும் மணியனூரை சேர்ந்த கண்ணன் என்பவரிடமும் லாட்டரி சீட்டுகளை விற்பனைக்காக கொடுத்து வந்ததையும் கூறினார். அதனால் அவர் செய்த குற்றத்தின் தன்மையை அவருக்கு எடுத்துக்கூறி அவரை காலை 9 மணிக்கு அவரை கைது செய்தார். பின்னர் அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அந்த நேரத்தில் அந்த இடத்தில் பொதுநபர்கள் யாரும் இல்லாத காரணத்தினால் அவருடன் சென்ற போலிஸ் சாட்சிகளான என் முன்னிலையிலும் அ.சா.1 செல்வராஜ் முன்னிலையிலும் ஆய்வாளர் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 9.15 மணி முதல் 10 மணி வரை பதிவு செய்தார்கள். மேலும் எங்கள் முன்னிலையிலேயே எதிரி மணிமாறன் எடுத்து ஒப்படைத்த 8 வெள்ளை துண்டு சீட்டுகளில் லாட்டரி எண்கள் எழுதிய சீட்டுகள் மற்றும் பணம் ரூ. 350 யும் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். மேலும் எதிரி மணிமாறன்கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கடந்த 22.08.2022 ம் தேதி குகை மாரியம்மன் கோவில்தெருவை சார்ந்த முருகதாஸ் என்பவரிடம் விற்பனை செய்த 10 லாட்டரிசீட்டுகளின் பணம் ரூ. 350 ம் மற்றும் மணியனூரை சேர்ந்த கண்ணன் என்பவரிடம் விற்பனை செய்த 15 லாட்டரிசீட்டுகளின் பணம் ரூ. 525 ஆகியவற்றையும் செலவு செய்தது போக மீதமிருந்த ரூ. 500 யை காலை சுமார்11 மணிக்கு நிலைய குற்ற எண் 221/2021 ல் வழக்கிற்காக கைப்பற்றுதல் மகசர் மூலம் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிகளிலும் நானும் மற்றும் அ.சா.1 செல்வராஜ் அவர்களும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரிமீது நிலைய குற்ற எண். 223/2022 வழக்கு பதிவு செய்து எதிரியை திரேக பரிசோதனை செய்து தகுந்த பாரா மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அன்றையதேதியில் எதிரி மீது பொதுமக்களில் யாரும் ஏமாற்றப்பட்டதாக புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அங்குள்ள தனிநபர்களையும் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரிதான். எதிரியானவர் லாட்டரி சீட்டுகளை தான் வைத்திருந்தார். வெள்ளை சீட்டுகளில் கேரளா மாநில லாட்டரி சீட்டு என்று எழுதப்பட்டிருந்தது. அதில் தேதியோ அல்லது எப்போது குலுக்கல் என்ற விவரமோ எழுதப்பட்டிருந்தது என்றால் ஞாபகத்தில் இல்லை. நான் கூறுவதுபோல சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அங்கு எதிரி நிற்கவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் அதன்பேரில் தடயங்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விசாரணைக்காக வீட்டிலிருந்து எதிரியை அழைத்து வந்து அவர் தனது செலவிற்காக வைத்திருந்த பணத்தை வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

முடியும் நேரம்: பிற்பகல் 3.50

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th August 2023.

Signature of witness.

Taken down by me in the open Court. Read by the witness/accused to be correct.

Sd/-G.Thanga Karthika
Judicial Magistrate No.3, Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.III, SALEM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No.**CC.No. 951 of 2022**

Prosecution : P.W. 3

Deposition of Witness for Defence :

Court : Judicial Magistrate No.3, Salem.

| | |
|---|---|
| Name | மகேந்திரபூபதி |
| Father's name | சண்முகம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th August 2023.

2023ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 21ம் நாள் திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா.** 3 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.E.சந்தோஷ்குமார், பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

துவங்கும் நேரம்: பிற்பகல் 03.50

**எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக கு.வி.மு.சபிரிவு 317ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது சேலம் மாநகர பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் செவ்வாய்பேட்டை காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது 24.08.2022ம்

தேதி காலை 8.30 மணிக்கு காவல் ஆய்வாளர் சண்முகசுந்தரம் அவரது தலைமையில் நானும், அ.சா.1 செல்வராஜ், அ.சா.2 பாலசுப்ரமணியம் ஆகியோரும் சேர்ந்து ரோந்து அலுவல் நிமித்தம் செவ்வாயபேட்டை ஸ்ரீமான் தியேட்டர் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் அருகே சென்றபோது அங்கு ஒரு நபர் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டு போலிசாராகிய எங்களை கண்டதும் தப்பியோட எத்தனித்தவரை போலிஸ் பார்ட்டி சகிதம்பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் மணிமாறன் என்றும் அவரது விலாசத்தை கூறினார். அவரை மேலும் விசாரிக்க அவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளான காருண்யா என்ற பெயர் கொண்ட லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளை துண்டு சீட்டுகளில் எழுதி பொதுமக்களுக்கு அவைகளை நிறைய பரிசு விழும் என ஆசை வார்த்தை கூறி விற்பனைக்கு வைத்திருந்ததையும் அவ்வப்போது சிறுசிறு வியாபாரிகளான குகை மாரியம்மன்கோவில் தெருவை சேர்ந்த முருகதாஸ் என்பவரிடம் மற்றும் மணியனூரை சேர்ந்த கண்ணன் என்பவரிடமும் லாட்டரி சீட்டுகளை விற்பனைக்காக கொடுத்து வந்ததையும் கூறினார். அதனால் அவர் செய்த குற்றத்தின் தன்மையை அவருக்கு எடுத்துக்கூறி அவரை காலை 9 மணிக்கு அவரை கைது செய்தார். பின்னர் அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அந்த நேரத்தில் அந்த இடத்தில் பொதுநபர்கள் யாரும் இல்லாத காரணத்தினால் அவருடன் சென்ற போலிஸ் சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 முன்னிலையிலும் ஆய்வாளர் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 9.15 மணி முதல் 10 மணி வரை பதிவு செய்தார்கள். எதிரி மணிமாறன் எடுத்து ஒப்படைத்த 8 வெள்ளை துண்டு சீட்டுகளில் லாட்டரி எண்கள் எழுதிய சீட்டுகள் மற்றும் பணம் ரூ. 350 யும் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். மேலும் எதிரி மணிமாறன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கடந்த 22.08.2022 ம் தேதி குகை மாரியம்மன் கோவில் தெருவை சார்ந்த முருகதாஸ் என்பவரிடம் விற்பனை செய்த 10 லாட்டரிசீட்டுகளின் பணம் ரூ. 350 ம் மற்றும் மணியனூரை சேர்ந்த கண்ணன் என்பவரிடம் விற்பனை செய்த 15 லாட்டரிசீட்டுகளின் பணம் ரூ. 525 ஆகியவற்றையும் செலவு செய்தது போக மீதமிருந்த ரூ. 500 யை காலை சுமார்11 மணிக்கு நிலைய குற்ற எண் 221/2021 ல் வழக்கிற்காக கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிகளிலும்அ.சா1 மற்றும் அ.சா.2

சாட்சியாக கையொப்பம் செய்தார்கள். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரிமீது நிலைய குற்ற எண். 223/2022 வழக்கு பதிவு செய்து எதிரியை திரேக பரிசோதனை செய்து தகுந்த பாரா மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அன்றையதேதியில் குற்றத்தடுப்பு சம்மந்தமாக நாங்கள் ரோந்து சென்றோம். அன்றையதேதியில் சந்தைபேட்டை, லாரிமார்க்கெட் ஆகிய இடங்களுக்கும் சென்றோம். காலை 8.30 மணியளவில் காவல் நிலையத்தில் இருந்து புறப்பட்டோம். ரோந்து பணிக்காக மற்ற இடங்களுக்கு சென்றுவிட்டு சம்பவ இடத்திற்கு வந்த சமயத்தில் மணி 8.45 இருக்கும். ரோந்து அலுவல் சென்ற விவரம் பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தததாக சொல்லப்படுகிற பகுதி பொதுமக்கள் நடமாட்டம் உள்ள போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி என்றால் சரிதான் அன்றையதேதியில் பொதுமக்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அப்போது பொதுமக்கள் இல்லை நாங்கள் மட்டுமே இருந்தோம். துண்டுச்சீட்டுகளில் 3 எண்கள் எழுதப்பட்டிருந்தது அதைத்தான் கைப்பற்றினார். என்னை சம்பவ தினத்தன்றே ஆய்வாளர் விசாரித்தார். சம்பவ இடம் சென்றதாக சொல்வது பொய் என்றாலும் எனக்கு அன்றையதினம் பணி ஒதுக்கப்படவில்லை என்றாலும் ஆய்வாளருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

முடியும் நேரம்: பிற்பகல் 04.05

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th August 2023.

Signature of witness.

Taken down by me in the open Court. Read by the witness/accused to be correct.

Sd/-G.Thanga Karthika
Judicial Magistrate No.3, Salem.